பங்கு இருக்க வேண்டுமென்ற அளவுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லிக் கொண்டு வருகிறேன். இப்போது நம்மிடம் புகார்கள் வந்தால், இங்கே இருக்கின்ற அதிகாரிகளை அனுப்புவதன் மூலம் அந்தப் பிரச்சினையை அவர்கள் பரிசிலிப்பதற்கு நடவடிக்கை நாம் எடுத்து வருகிறோம். நம்முடைய மாநில அரசு அதிகாரிகளையே அங்கு அதிகாரிகள் என்ற முறையிலே போட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்

***55 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்)** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1981 ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட அல்லது உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) பொதுமக்களால் விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை?

(உ) அவை எவை, எவை? அவற்றிற்குரிய காரணங்கள் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ) மற்றும் (உ) அவை முன் விவர அறிக்கை ஒன்று @ வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, சென்ற கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பையும் சேர்த்திருக்கிறார்கள். வரும் கல்வி ஆண்டில் அதே அளவிலே மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குகின்ற யோசனை அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. பல்வேறு இடங்களில், மேல்நிலைப் பள்ளிகளை அனுமதிக்கவேண்டிய அளவுக்குத் தேவை இருப்பதை அரசு உணர்கின்றது. என்றாலும், இதுவரையிலும் அனுமதிக்கப்பட்ட பள்ளிகளில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லை என்ற சூழ்நிலை சில பள்ளிகளிலே இருப்பது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து, அதற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு நினைத்துக்கொண்டிருக்கிறது.

@ 202-210 ஆம் பக்கங்களில் இணைப்பு IIஆக அச்சிடப்பட்டுள்ளது.